யாழ்ப்பாண பொதுநூலகம்

ISSN 1391-9504

# விஜய்
Vijey விஜய்


29.03.2017 - மலர் 14, இதழ் 05




# பாடசாலை உணவகத்தின் தரம் பேணல்...



## செவ்வாயில் முதலாவது நகரம்




## மட்டக்களப்பு தலைவாயில்...




விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை அழகுபடுத்துவதிலும் வளப்படுத்துவதிலும் மரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அத்தகைய மரங்களில் சிறப்புத் தன்மைகளுடன் கூடிய சில அபூர்வ மரங்கள் பற்றிய தகவல்களைப் பார்ப்போம்.



# அபூர்வ மரங்கள்



## அகன்ற மரம்

★ விஞ்ஞானப் பெயர்: *Montezuma cypress*



டுலே ட்ரீ (*Tule tree*) எனும் இந்த மரம், சைப்ரஸ் தாவர வகையைச் சார்ந்தது. மெக்ஸிகோவின் சென்டா மரியா நகரிலுள்ள கத்தோலிக்க தேவாலயமொன்றின் வளவிலேயே, இந்த மரம் காணப்படுகின்றது. 116 அடி உயரம் கொண்ட இதன் அடிப்பகுதியின் சுற்றளவு 119 அடியாகும். இது 2,000 வருடங்கள் பழமையானது. இன்றும் வளர்ந்த வண்ணமே உள்ளது.

## இயற்கையின் நீர்த்தாங்கி

★ விஞ்ஞானப் பெயர்: *Adansonia*



பெருக்க மரமே 'இயற்கையின் நீர்த்தாங்கி' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. மடகஸ்கர், ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு உரிய தாவர இனமாக இது கருதப்படுகின்றது. இலங்கையில் நெடுந்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் இவற்றைக் காணலாம். இந்த மரத்தின் தண்டானது, சுமார் 50 மீற்றர் சுற்றளவைக் கொண்டிருக்கும். இதன் தண்டுப்பகுதியில் 10,000 லீற்றருக்கு அதிகமான நீரை தேக்கி வைத்திருக்க முடியும்.

## வர்ணமயமான மரம்

★ விஞ்ஞானப் பெயர்: *Eucalyptus deglupta*



வானவில் யூக்கலிப்டஸ் (*Rainbow eucalyptus*) எனும் இந்த மர வகை, 250 அடி உயரம்வரை வளரும். அடிப்பகுதி இளம் சிவப்பு, கபிலம், மஞ்சள், ஊதா, பச்சை போன்ற வர்ணங்களை கொண்டிருக்கும். அடிமரத்தில் இவ்வாறு பல்வேறு வர்ணங்கள் ஏற்படுவதற்கு காரணம், நிறக் கலங்கள் பரிணாமம் அடைவதாகும் என தாவரவியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.இந்த மரவகை கடதாசி உற்பத்திக்கு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது.

## இரத்தம் சிந்தும் மரம்

★ விஞ்ஞானப் பெயர்: *Dracaena cinnabari*



இந்த மரம், யெமனின் சொகொட்ரா பாலைவனப் பகுதியில் காணப்படுகின்றது. பெரியதொரு காளானின் தோற்றத்தை ஒத்திருக்கின்றது. இதிலிருந்து நீர் ஆவியாகி வெளியேறுவது மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதாக தாவரவியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதன் கிளைகளில் இருந்தும் காய்களில் இருந்தும் அடிமரத்தில் இருந்தும் வெளியேறும் நீர் செந்நிறமாக இருக்கின்றது. இதனால்தான் இந்த மரம் 'இரத்தம் சிந்தும் மரம்' எனப்படுகின்றது.



## உயரமான மரம்

★ விஞ்ஞானப் பெயர்: *Sequoia sempervirens*



இதுவரை கண்டுபிடிக்கப் பட்டதன்படி, மரங்களில் மிக உயரமானதாகக் கருதப்படும் இந்த ரெட்வுட் மரம், அமெரிக்காவின் லிபர்ட்டி சிலையைவிட உயரமானது. இதன் உயரம் 369.5 அடி ஆகும். கெலிஃபோர்னியாவின் சியெரா நெவாடா மலைத்தொடருக்கு அருகில் இது காணப்படுகின்றது. இந்த மரத்தின் வயது 800 முதல் 1000 வருடங்கள் வரை இருக்கலாம் என கணிப்பிடப்பட்டுள்ளது. (-அ)

## பாலைவன அதிசயம்

★ விஞ்ஞானப் பெயர்: *Prosopis cineraria*



பஹ்ரேனில் உள்ள பாலைவனப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த மரம், 500 வருடங்கள் பழமையானது. 'பாலைவனத்து அதிசயம்' என இது புகழ்பெற்றுள்ளது. எத்தகைய நீரையும் போஷாக்காகக்கொள்ளாமல் கிளைகளைப் பரப்பி பசுமையாக வளர்ந்திருப்பதானது வியப்பை தருகின்றது.

## மிகப் பெரிய மரம்

★ விஞ்ஞானப் பெயர்: *Sequoiadendron giganteum*




இது, ரெட்வுட் தாவர இனத்திற்குரிய ஒரு மரமாகும். கெலிஃபோர்னியாவின் செகொய்யா தேசிய பூங்காவில் காணப்படுகின்றது. 275 அடி உயரமுடையது. அடிமரத்தின் சுற்றளவு 102 அடியாகும். 1500 கன மீற்றர் கனவளவு கொண்ட இந்த மரம், 2500 வருடங்கள் முதல் 3000 வருடங்கள் வயதுடையது என கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சா/தர, உ/தர பரீட்சைகள் டிசம்பர் மாதத்தில்...


## 2019 இல் அமுலாகும்



க.பொ.த (சா/தர),(உ/தர) பரீட்சைகள் இரண்டையும் வருடத்தின் இறுதியில் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இது அமுல்படுத்தப்படும் எனவும் தெரியவருகின்றது.

தற்போதைய நடைமுறையின்படி, உ/தர பரீட்சை ஓகஸ்ட் மாதத்திலும் சா/தர பரீட்சை டிசம்பர் மாதத்திலுமே நடைபெற்று வருகின்றன. இதில் சில நடைமுறை சிரமங்கள் இருப்பதைக் கவனத்தில் கொண்டே 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இரண்டு பரீட்சைகளையும் வருடத்தின் இறுதியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# டெங்கு பாதிப்பு அதிகரிப்பு!



கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா போன்ற பகுதிகளில் ‘டெங்கு’ பரவலாகப் பரவி வருவதையிட்டு கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இதற்கமைய, கிண்ணியா கல்வி வலயத்தில் கிட்டத்தட்ட 66 பாடசாலைகள் கடந்த வாரம் மூன்று தினங்களாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தினங்களில் குறித்த பாடசாலைகளின் சுற்றுப்புறங்களை சுத்தப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சுகாதாரத்துறை தகவல்களின்படி, பாடசாலை மாணவர்களே அதிக எண்ணிக்கையில் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு பாதிப்பிற்கு உள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகமானோர் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652




# ‘மாதிரி திறன் வகுப்பறை’ திட்டம் ஆரம்பம்





கல்வித்தரப்படுத்தல் திட்டங்களை முன்னெடுக்கையில் பலவித தடைகளையும் தாண்டி மாணவர்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என கல்வித்துறை அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஜயவர்தனபுர ஆண்கள் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ‘மாதிரி திறன் வகுப்பறை’ (Smart Classroom) திறப்பு விழாவின்போதே, மேற்படி கருத்துக்களை அவர் தெரிவித்தார். மாற்றங்களால் மாறிக்கொண்டிருக்கும் நவீன உலகத்துடன், கல்விச் செயல்முறைகளையும் தொடர்புபடுத்துவதன் மற்றுமொரு நகர்வே இந்த மாதிரி திறன் வகுப்பறை திட்டம் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

25 பாடசாலைகளில் மாதிரி திறன் வகுப்பறை திட்டம் கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நாளடைவில் நாடளாவிய ரீதியில் இத்திட்டம் வியாபிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# உண்மையான மலர்

முன்னொரு காலத்தில் கிரேக்க நாட்டில் சாலமன் என்ற மன்னர் ஆட்சி புரிந்தார். சிறந்த அறிஞரான அவருடைய புகழ் உலகெங்கும் பரவி இருந்தது. சாலமனுடைய அறிவைச் சோதனை செய்ய எகிப்து நாட்டு அரசி சீபா விரும்பினாள். அதற்காக கிரேக்க நாட்டை வந்தடைந்தாள். சாலமனும் சீபாவைச் சிறப்பாக வரவேற்று, அரண்மனையில் தங்க வைத்தார்.

ஒருநாள் அழகிய பூந்தோட்டத்தால் சூழப்பட்ட அரண்மனையின் விருந்தினர் அறையில் அமர்ந்து, இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். “எப்படிப்பட்ட சிக்கலாக இருந்தாலும் தீர்க்கக்கூடியவர் என்று உலகம் உங்களைப் புகழ்கின்றது. அதனால், உங்கள் அறிவை நான் சோதிக்கலாமா?” என்று கேட்டாள் சீபா. அதற்கு “சரி” என்று புன்னகையுடன் சம்மதித்தார் சாலமன்.

சீபா தன் அருகே நின்றிருந்த பணிப்பெண்ணைப் பார்த்தாள். குறிப்பு அறிந்த அந்தப் பணிப்பெண் தன் பையிலிருந்து மூன்று மலர்களை எடுத்தாள். சாலமனும் சீபாவும் இருந்த இடத்தில் இருந்து நேராக சிறிது தொலைவில் இருந்த மேசையின் மீது மூன்று மலர்களையும் அந்த பணிப்பெண் வைத்தாள்.

அப்போது, சாலமனை நோக்கிய சீபா, “அரசே! இந்த மூன்று மலர்களில் ஒன்று மட்டுமே உண்மையான மலர், ஏனைய இரண்டும் போலிகள். நீங்கள் இங்கே இருந்தபடி உண்மையான மலர் எது என்று கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும்” என்றாள். மூன்று மலர்களும் அளவிலும் வண்ணத்திலும் அழகிலும் ஒரே மாதிரி இருந்தன. அந்த மலர்களில் எந்த வேறுபாடும் சாலமனுக்குக் தெரியவில்லை.




அதனால், தன் அருகே இருந்த வீரனிடம், “நன்றாகக் காற்று வரட்டும், அறையின் ஜன்னல்களைத் திறந்துவிடு” என்றார் சாலமன்.

வீரனும் மன்னனின் ஆணை கேட்டு எல்லா ஜன்னல்களையும் திறந்துவிட்டான். குளிர்ந்த காற்று உள்ளே வீசியது. நீண்ட நேரம் மலர்களையே உற்றுக் கவனித்த சாலமன் “நடுவில் இருக்கும் மலரே உண்மையானது மற்றவை இரண்டும் போலிகள்” எனக் கூறினார்.

இதைக் கேட்ட அரசிக்கு வியப்பாக இருந்தது. “அரசே! தாங்கள் எவ்வாறு உண்மையான மலரைக் கண்டறிந்தீர்கள்” எனக் கேட்டாள். அதற்கு சாலமன், “அருகில் இருந்த பூந்தோட்டத்தில் பறந்துகொண்டிருந்த தேனீக்களில் ஒன்றாவது உள்ளே வராதா என்ற எண்ணத்தில்தான் ஜன்னல்களைத் திறக்கச் சொல்லி ஆணையிட்டேன். நான் எதிர்பார்த்தபடியே ஜன்னல் வழியாக வந்த தேனீ ஒன்று நடுவில் இருந்த மலரில் மட்டும் அமர்ந்து தேனைக் குடித்தது. அதனால், அந்த மலரே, உண்மையான மலர் என்று கூறினேன்” என்று சாலமன் விளக்கினார். சாலமனின் அறிவுக் கூர்மையை நினைத்து வியந்த சீபா மன்னரைப் பெரிதும் பாராட்டினாள்.

# விந்தையான விலங்கு

கிரேக்க நாட்டில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் ‘தேபெசு’ என்ற நகரம் சீரும் சிறப்புமாக விளங்கியது. அந்த நகருக்குள் செல்ல ஒரே ஒரு பாதைதான் இருந்தது. அந்த பாதையின் இரு பக்கங்களிலும் மலைகளும் குன்றுகளும் இருந்தன.



ஒருநாள் அந்தப் பாதையில் இருந்த மலைகளில் பெரிய மலையொன்றின் உச்சியில் ‘ஸ்பிங்ஸ்’ என்ற ஒரு பூதம் வந்து அமர்ந்தது. பெண்ணின் தலை, பறவையின் இறக்கைகள், சிங்கத்தின் உடலோடு மிக விசித்திரமாக காட்சியளித்த அந்தப் பூதம் பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாக இருந்தது. அந்த வழியே யார் வந்தாலும் அவர்களை அந்தப் பூதம் மடக்கிப் புதிர் போட்டது. புதிரை விடுவிக்க முடியாமல் திணறும்போது, அவர்களை அது விழுங்கியது. இவ்வாறு பூதத்தால் கொல்லப்பட்டவர்கள் எண்ணற்றவர்களாக இருந்தனர்.

இதனால், ‘தேபெசு’ நகரத்திற்கு வருவோர் தொகை குறைந்தது, அங்கே இருந்தவர்களும் அந்தப் பூதத்திற்கு அஞ்சியபடியே வாழ்ந்தனர். அதேநேரம், பக்கத்து நகரத்தில் ‘மார்க்’ என்ற இளைஞன் இருந்தான். வாழ்க்கையில் வெறுப்புக்கொண்ட அவன் என்ன நிகழ்ந்தாலும் நிகழட்டும் என்ற எண்ணத்தில் தேபெசு நகரத்தை நோக்கிப் பயணித்தான். அப்போது, அவனை மடக்கிய ஸ்பிங்ஸ் பூதம், ''நான் போடும் புதிரை நீ விடுவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நான் இந்த மலையிலிருந்து கீழே குதித்து இறந்துவிடுவேன். இல்லையேல் உன்னை விழுங்கி விடுவேன்'' என்றது.

''சரி புதிரைச் சொல்'' என்றான் மார்க்.

''பிறந்தவுடன் நான்கு கால், வளர்ந்தவுடன் இரண்டு கால், இறக்கும் முன்னர் மூன்று கால். இவ்வாறு உலகில் உலவும் விலங்கு எது?'' என்று புதிரைக் கேட்டது பூதம். சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கிய மார்க், ''அந்த விந்தையான விலங்கு மனிதன் குழந்தைப் பருவத்தில் தவழ்வதால் நான்கு கால், பின்னர் நடப்பதால் இரண்டு கால், முதுமையில் தடியை ஊன்றி நடப்பதால் மூன்று கால்'' என்று கூறிப் புதிரை விடுவித்தான். இதைக் கேட்ட அந்தப் பூதம் மலை உச்சியில் இருந்து கீழே விழுந்து இறந்தது. அன்றில் இருந்து தேபெசு நகர மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்து வந்தனர்.



“நீங்க சொன்னபடி ஒரு பழம்தான் சாப்பிட்டுப் படுத்தேன்... ஒரே வயித்து வலி டொக்டர்!”

“வாழைப்பழம்தானே சாப்பிட்டீங்க?”

“இல்லை....., டொக்டர். முழுசா ஒரு பலாப்பழம்...”

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் வெகுமதியான பரிசில்களை வெல்லுங்கள்!

Anchor Newdale

## டெப் சாம்ஸ்




| | | |
|---|---|---|
| 1. | K A தெனுவனி தக்ஸாலினி | பன்னிப்பிட்டிய |
| 2. | A பிரான்சிஸ் வம்பீக் | ராகம |
| 3. | J M அசிந்த இந்துசார | புத்தல |
| 4. | S K Y ஹெட்டியாராச்சி | குருநாகல் |
| 5. | A M S H அத்தநாயக்க | மாவனெல்லை |
| 6. | லசிரு செனயச | குட்டுனேரியா |
| 7. | D D ஜெயவர்தன | வத்தளை |

## கேமிங் சாம்ஸ்



| | | |
|---|---|---|
| 1. | லசித ஜனித் | அங்கொடை |
| 2. | WP கீதானி பத்திரண | பல்லேவல |
| 3. | E மிந்தி கருணாரத்ன | நாகொடை |
| 4. | D N ஹேரத | குருநாகல் |
| 5. | T M கலபதி | பாணந்துறை |
| 6. | S தெவ்மினி | பதுளை |
| 7. | H அமாதி | கொழும்பு 06 |

## கூடைப்பந் சாம்ஸ்



| | | |
|---|---|---|
| 1. | தஹாம் சத்சரா | நீர்கொழும்பு |
| 2. | U சந்தீப் குணவர்தன | ஹொரணை |
| 3. | பெதும் சுதீர | கொச்சிக்கடை |
| 4. | M P I தசநாயக்க | தெல்தெனிய |
| 5. | R G G R M S K ரத்நாயக்க | உலப்பனை |
| 6. | J T அஷேன் | அங்கொடை |
| 7. | P M பெரேரா | மொரட்டுவை |

## ஸ்கூட்டி சாம்ஸ்



| | | |
|---|---|---|
| 1. | T இசுக்க தில்வான | பிட்டிகல |
| 2. | E D பியோரா அஞ்சனா | பேருவளை |
| 3. | K A H சனுலயா ஜெயசிங்ஹ | பதுளை |
| 4. | B G N D அமரசிங்ஹ | ஹிந்தெலன |
| 5. | M A F அஸ்கா | பதுளை |
| 6. | M S முபசரா | குருநாகல் |
| 7. | S நாணயக்கார | அகிமான |



## சைக்கிள் சாம்ஸ்

| | | |
|---|---|---|
| 1. | A வித்தாரண | பத்தரமுல்லை |
| 2. | G அஞ்சலி பூர்ணிமா | தொம்பை |
| 3. | W R ரிவிந்தி இமாஸா | அஹங்கம |
| 4. | H J N டில்ஹானி | செவனகல |
| 5. | M. இசாம் குரமோதயோ | வத்தளை |
| 6. | E A L K எதிரிசிங்ஹ | அநுராதபுரம் |
| 7. | D S V சுபயசிறி | மாத்தறை |




அங்கர் நியுடேல் மேல் உறைகள் 04

உங்கள் பெயர் முகவரி தொலைபேசி இலக்கத்துடன் த. பெ. இல 04 பியகம என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலதிக விபரங்களுக்கு : 0115 478 478

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை உணவகம் என்பது பாடசாலை மாணவ, மாணவிகளின் போசாக்குத் தொடர்பில் பொறுப்புக் கூறும் ஓர் இடமாகும். அதனால் பாடசாலை உணவகம் தரமானதாக இருக்க வேண்டும். உணவகத்தின் சுத்தம், உணவுகளின் போசாக்குத்தன்மை, உணவுகள், பானங்கள் பரிமாறப்படும் விதம் என்பன குறித்து இங்கு அதிக கவனத்தில் கொள்ளப்படும். பாடசாலை உணவகத்தினை நடத்துவது தொடர்பாக, கல்வி அமைச்சு 35/2015 இலக்க சுற்று நிருபத்தில் சில பொது ஆலோசனைகளை வெளியிட்டுள்ளது. அவை பற்றிய சில விளக்கங்கள் வருமாறு:






## பாடசாலைப் பிள்ளைகளின் உணவு முறை

பாடசாலைக்கு வரும் பிள்ளைகளில் பெரும்பாலானோர் பட்டினியுடன் வருவதாகவே ஆய்வில் தெரிய வந்துள்ளது. இதற்கு இரு காரணங்கள் உள்ளன.

முதலாவது: வீட்டில் உணவு பற்றாக்குறை,

இரண்டாவது: வீட்டில் உணவு இருந்தாலும் காலை உணவினை உட்கொள்ளாமை.

பாடசாலைக்கு வந்த பின்னர் உட்கொள்வதற்காக உணவை எடுத்து வரும் பிள்ளைகளும், பாடசாலைக்கு வந்த பின்னர் உணவகத்தில் உணவு உட்கொள்ளும் பிள்ளைகளும் உள்ளனர். சில பாடசாலைகளில் காலை உணவினை வழங்குவதற் கான நடைமுறைகளும் உள்ளன.

எவ்வாறாயினும் பாடசாலை செல்லும் பிள்ளைகள் சரியான நேரங்களில் உணவு உட்கொள்ளாமை காரணமாக, நோய்வாய்ப்பட நேரிடலாம் என ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

## தவறான உணவுப் பழக்கத்தின் விளைவுகள்

பாடசாலை மாணவர்கள் கோதுமை மாவில் செய்யப்பட்ட துரித உணவுகளையே அதிகம் உட்கொள்கின்றனர். மேலும் இனிப்பான செயற்கை குளிர்பானங்களை அருந்தும் பழக்கமும் காணப்படுகின்றது. இதன் விளைவாக உடல் மெலிதல், உடற் பருமன் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மேலும் இதய நோய்கள், நீரிழிவு, புற்றுநோய் போன்ற நோய்களும் அதிகரிக்கின்றன.




## பாடசாலை உணவகத்தின் பொறுப்பு

பாடசாலையில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் துரித உணவுகள் மற்றும் செயற்கை குளிர்பானங்களை வழங்காமல் இருப்பது பாடசாலை உணவகத்தின் பொறுப்பாகும்.

## பாடசாலை உணவகத்திற்கான வரையறை


1980 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் மற்றும் 2009-09 இலக்க நுகர்வு விவகாரங்கள் பற்றிய சட்டத்தின் பிரகாரம் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் ஆரோக்கியமான உணவினை பெறும் வசதி, அது தொடர்பில் உறுதிசெய்தலானது, பாடசாலை உணவகத்தின் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பாகும்.

உணவு தயாரிப்பவர்கள், உணவு விநியோகிப்பவர்கள் மற்றும் பயன்படுத்தும் உபகரணங்களின் சுத்தம் என்பன தொடர்பில் உறுதி செய்தல் வேண்டும்.

பாடசாலை உணவகத்தில் ஆரோக்கியமான உணவுகளை ஊக்குவித்தல் வேண்டும்.

பாடசாலை உணவகத்தில் தடைசெய்யப்பட்ட அதிக எண்ணெய், அதிக சீனி மற்றும் அதிக உப்புக்கொண்ட உணவுகளை விற்பனை செய்யக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# களது பாடசாலை வகம் இவ்வாறானதா?

## உணவகத்தினை நடத்துதல்

- ★ அனுமதிக்கப்பட்ட உணப் பொருட்களின் விலைகளை பார்வைக்கு படுமாறு பட்டியலிடல்.
- ★ உணவக சூழ்நிலையும், அங்கு பயன்படும் அனைத்து உபகரணங்களும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
- ★ உணவக ஊழியர்களுக்கான அடையாள அட்டையை ஊழியர்கள் எந்நேரமும் அணிந்திருத்தல் வேண்டும்.
- ★ உணவக ஊழியர்கள் உணவக நடவடிக்கையின்போது, சுத்தமான ஆடைகளை அணிந்திருத்தல் வேண்டும்.
- ★ பெண்கள் பாடசாலை எனில் ஆகக் குறைந்தது ஒரு பெண் ஊழியராவது இருத்தல் வேண்டும்.

## பாடசாலை உணவகத்தில் விற்பனை செய்யக்கூடாத உணவு மற்றும் பானங்கள்

- ★ கொழுப்பு அதிகமான உணவுகள்
- ★ தயாரிக்கப்பட்ட மாமிச உணவுகள் (உ+ம்- ஹெம்பேர்க், சொசேஜஸ், புரொக்வர்ஸ்ட், லிங்குஸ், பேக்கின் கொண்ட பேஸ்ட்டி உணவுகள்)
- ★ எண்ணெயில் நன்கு பொரிக்கப்பட்ட உணவுகளான ரோல்ஸ், பெட்டிஸ், சமோசா, கட்லட், பொரித்த கிழங்கு வகைகள்.
- ★ சொக்லேட், டோனட், எக்ளெயார், சொக்லேட் பிஸ்கட், கேக், கிறீம் பிஸ்கட், பிஸ்கட் புடிங், ஐஸ் கேக், ஊக்க பானங்கள்.
- ★ கோடியல், செயற்கைப் பழப்பானங்கள், குளிர்பானங்கள்.

## பாடசாலை உணவுக் கமிட்டியில் நீங்கள் சேரலாம்

பாடசாலையின் நுகர்வுக் குழுவில் இணைந்து உணவகத்தின் உணவு விநியோக நடைமுறைகள் குறித்து மாணவர்களூடாக கண்காணித்து அறிக்கை ஒன்றை எழுதுங்கள். வாராந்தம் இந்த அறிக்கையை பாடசாலையின் உத்தியோகபூர்வ உணவுக் குழுவின் தலைவராகப் பணியாற்றும் அதிபரிடம் வழங்குங்கள்.

## பாடசாலை உணவகத்தில் விற்பனை செய்யப்பட வேண்டிய உணவுகள்

தேசிய உணவுகளை இங்கு விற்பனை செய்ய முடியும். குரக்கன், சோள மா, அரிசி மா, ஆட்டா மா போன்ற மா வகையில் தயாரித்த உணவுகள், பலா, ஈரப்பலா, மரவள்ளி, சீனிக்கிழங்கு, சோறு, பாற்சோறு, காய்கறிகள், பழங்கள், அத்தோடு மீன், இறைச்சி, கருவாடு போன்றவற்றினால் தயாரிக்கப்பட்ட உணவுகள், பால், யோகட், தயிர், தண்ணீர், இலைக்கஞ்சி, இளநீர், ஆகியன பாடசாலை மாணவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உணவுகளாகும்.

எண்ணெயில் அதிக நேரம் பொரிக்கப்பட்ட உளுந்து வடை, பருப்பு வடை என்பனவற்றுக்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

## பொதுவான விடயம்

பாடசாலை உணவு விற்பனை நிலையங்களில் கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பொலித்தீன் பாவனையைக் குறைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் பொலித்தீன் பாவனை முழுமையாக அரசினால் தடை செய்யப்படவுள்ளது.







## அகராதி

- ★ Safety of foods - உணவுப் பாதுகாப்பு
- ★ Model menus - மாதிரி உணவு
- ★ Nutritional status - போசாக்கு நிலைமை
- ★ Health foods - ஆரோக்கியமான உணவு
- ★ Canteen premises - உணவக சூழல்
- ★ Running of canteens - உணவகத்தினை நடாத்துதல்
- ★ School development society - பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
- ★ Natural fruits - இயற்கைப் பழங்கள்
- ★ Foods with too much sugar - இனிப்பு அதிகமான உணவு
- ★ Deep fried foods - எண்ணெயில் அதிக நேரம் பொரிக்கப்பட்ட உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ...............................................

01) சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கீறிடுக.

01. வீட்டில் வாழும் பல்லி ஒரு .......................

1. தாவர உண்ணி 2. மாமிச உண்ணி
3. அனைத்தும் உண்ணி

02. மண்புழுவின் சுவாச அங்கம் யாது?

1. நுரையீரல் 2. தோல் 3. பூ

03. முன்னங்கால்களால் உணவைப் பற்றும் பிராணி எது?

1. அணில் 2. காகம் 3. புறா

04. அதிக நாட்களுக்கு நீர் அருந்தாமல் இருக்கக்கூடிய பிராணி எது?

1. வாத்து 2. யானை 3. ஒட்டகம்

05. வளவை கங்கை கடலுடன் கலக்கும் இடம் யாது?

1. ஹம்பாந்தோட்டை 2. கொழும்பு
3. களுத்துறை

06. ஆறுகள் கடலுடன் கலக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

1. கழிமுகம் 2. முனை
3. கடனீரேரி

07. வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் பூக்கும் தாவரம் எது?

1. மரமுந்திரிகை 2. பனை
3. மேற்கூறிய யாவும்

08. நீரோடைகளில் மீன் பிடிக்க உதவும் உபகரணம் எது?

1. அத்தாங்கு 2. வலை 3. வீச்சுவலை

09. லங்காதிலக விகாரை அமைந்துள்ள நகரம்;

1. கம்பளை 2. கண்டி
3. அநுராதபுரம்

10. ஒரு நாட்டின் தேசிய கீதத்தின் நோக்கம் யாது?

1. அந்நாட்டின் தேசிய ஒற்றுமையை வளர்த்தல்
2. அந்நாட்டின் நாட்டுப்பற்றை வளர்த்தல்
3. மேற்கூறிய யாவும்




11. இலங்கையின் தேசிய விளையாட்டாக கருதப்படுவது;

1. உதைபந்தாட்டம் 2. வலைப்பந்தாட்டம்
3. கரப்பந்தாட்டம்

12. இலங்கை குடியரசாக மாறிய ஆண்டு எது?

1. 1948 2. 1958 3. 1972

13. தேசிய கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பம் பின்வருவனவற்றுள் எது?

1. திருமண வைபவம் 2. கோயில் திருவிழாக்கள்
3. அரச வைபவங்கள்

14. இலங்கைப் படத்தில் பெருந்தெருக்களைக் குறிக்கப் பயன்படுத்தும் நிறம்;

1. சிவப்பு 2. கறுப்பு 3. பச்சை

15. திசையறிகருவி இன்றிப் பகலில் திசையை அறிய உதவுவது;

1. சூரியன் 2. சந்திரன் 3. நட்சத்திரங்கள்

02) தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 01. கண்டி | கப்பல் |
| 02. கரப்பு | ஒரு வருடம் |
| 03. கடல் | தலதா மாளிகை |
| 04. விமானம் | மீன் |
| 05. 12 மாதங்கள் | ஆகாயம் |
| 06. ஏர் | ஆமணக்கு |
| 07. வறண்ட நிலம் | யானை |
| 08. வித்து | சமயம் |
| 09. தாவர உண்ணி | நாகதாளி |
| 10. நல்வாழ்வு | மாடுகள் |

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)


### கணிதம்

(மார்ச் 22 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| *01. 1* | *04. 1* | *07. 3* | *10. 3* | *13. 2* |
| *02. 2* | *05. 1* | *08. 1* | *11. 1* | *14. 1* |
| *03. 3* | *06. 2* | *09. 1* | *12. 3* | |

Digitized by Noolaham Foundation.

## அக்குபஞ்சர் மருத்துவம் மனித உடலில் எவ்வாறு செயற்படுகின்றது?



'அக்குபஞ்சர்' என்பது மனித உடலில் ஏற்படும் வலி அல்லது நோய்களின் போது ஊசிகளை உடலில் குத்தி நிவாரணம் பெறும் சீன மருத்துவ முறை ஆகும். மனித உடலிலுள்ள இயற்கையான 'சமச்சீர் இயக்கம்' நேர், எதிர்மறை சக்தியால் இயங்குகின்றது. இச்சக்தியானது மனிதனின் உணவு முறை, அவனை சுற்றியிலுள்ள சுற்றுப்புறச் சூழல் மூலம் பாதிக்கப்படுகின்றது. இதனால், மனிதன் பாரிய நோய்களுக்கு உள்ளாகின்றான். இதனை தடுக்கும் வகையில் மனித உடலின் தெரிவுசெய்யப்பட்ட நாளங்களில் அக்குபஞ்சர் ஊசிகளை குத்துவதால் சமச்சீர் இயக்கத்துக்குரிய நேர், எதிர்மறை சக்திகள் தூண்டப்படுகின்றது. இதனால், மனித உடல் சீராகின்றது. இதுவே அக்குபஞ்சர் சிகிச்சை முறையின் அடிப்படையாகும்.




## சத்திர சிகிச்சை செய்யும் மருத்துவ ஊழியர்கள் அனைவரும் பச்சை நிற ஆடைகளை அணிவது ஏன்?



நோயாளி ஒருவருக்கு சத்திர சிகிச்சை செய்யும்போது, அதிகளவான குருதி வெளியேறும். இவ்வாறு வெளியேறும் குருதியைக் கண்டவுடன் மருத்துவ ஊழியர்களில் சிலர் பதற்றம் அடையக் கூடும். அதனால், சத்திரசிகிச்சையில் ஏதெனும் தடங்கல் ஏற்படலாம். இதனை கருத்தில் கொண்டு, பச்சை நிறத்திலான ஆடைகளை அணிவதன் மூலம் கண்களுக்கு குளிர்ச்சி ஏற்பட்டு அச்சம் மற்றும் பதற்றத்தை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். மேலும், பச்சை நிறமானது கண்ணுக்கு குளிர்ச்சியை தரும் நிறமாதலால், அது நோயாளியின் மனோ நிலையை பதற்றமின்றி பேண உத வுகின்றமை யும் குறிப்பிடத்தக்கது. இதனால்தான் மருத்துவ ஊழியர்கள் மட்டுமன்றி, சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்படும் நோயாளிக்கும், பச்சை நிற ஆடை அணிவிக்கப்படுகின்றது. இவ்வாறே, சத்திர சிகிச்சை அறைகூட பச்சை நிறத்தால் பூசப்பட்டிருக்கும்.

## ஊசி இல்லாமல் உடலில் மருந்தை உட்செலுத்தும் முறை



இங்கு படத்தில் காட்டப் பட்டுள்ள கருவியின் பெயர் ஜெட் இன்ஜெட்டர் என்பதாகும். இந்த கருவி யின் மூலம் ஊசியில்லாமல் உடலில் மருந்தினைச் செலுத்த முடியும். இந்த கருவியை பாவிக்கும்போது, கருவியில் பொருத்தப்பட் டுள்ள சிறிய காற்றுத் தாங் கியில் இருந்து வெளிவரும் காற்று அழுத்தத்தின் மூலம் தோலில் உள்ள துவாரங்கள் விரிவடைகின்றன. இதன்மூலம் கருவியில் உள்ள மருந்து உடலுக் குள் உட்செலுத்தப்படு கிறது. அத்தோடு, மருந் தேற்றப்பட்டதற்கான எவ்வித தழும்போ அல்லது வலியோ உடலில் இருக்காது.



இந்த கருவியின் மூலம் 1968 ஆம் ஆண்டள வில் பெரியம்மை நோயாளிகளுக்கு மருந்தேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

**Thoovaanam SMS செயற்படுத்தும் முறை**

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
29.03.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 29.03.2017
விடை : ..................
பெயர் : ..................
முகவரி : ..................
தொ.பே.இல: ..................
பாடசாலை : ..................
..................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 15.03.2017
விடை: லண்டன்
வெற்றியாளர்:
எஃப்.தஹ்றாணி,
191, உக்கார் வீதி,
மலையடி-01, சம்மாந்துறை.

Gift sponsored by:
www.srijob.com







How to ask Questions + Answers
In English
E-Book




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் தனித்து நிற்கும் மிக உயரமான கடிகார கோபுரம்


மைசூரில் கட்டப்பட்டுவரும் கடிகார கோபுரம்

**மைசூரில் நிர்மாணப்பணிகள் ஆரம்பம்...**

உலகின் மிக உயரமான தனித்து நிற்கும் கடிகார கோபுரம், இந்தியாவின் மைசூர் நகரில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான இன்ஃபோசிஸ் நிறுவனமே இதனை நிர்மாணித்து வருகின்றது.

கர்நாடக மாநிலம் மைசூரில் அமைந்திருக்கும் இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் பன்னாட்டு கல்வி மைய வளாகத்திலேயே இது அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த கடிகார கோபுரம், லண்டனிலுள்ள எலிசபெத் கோபுரத்தைவிட (பிக்பென் கோபுரம்) உயரம் கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது. எலிசபெத் கோபுரமானது, 96 மீற்றர் உயரம் கொண்டதாகும். ஆனால், மைசூரில் அமைக்கப்பட்டு வருகின்ற கடிகார கோபுரம் சுமார் 135 மீற்றர் உயரத்தைக் கொண்டதாக இருக்கும். அத்துடன், உலகில் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள பெரும்பாலான கடிகார கோபுரங்களில் இயந்திரக் கடிகாரங்களே பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், மைசூர் கோபுரத்தில் டிஜிட்டல் கடிகாரமே பொருத்தப்படவுள்ளது.

இந்த கடிகார கோபுரத்தை நிர்மாணிப்பதற்காக சுமார் 60 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கோதிக் பாணியில் கட்டப்படவிருக்கும் இந்த கோபுரம், 19 மாடிகளைக் கொண்டதாக இருக்கும். இதில் கூட்ட அறைகள், நூலகம், பார்வையாளர் மாடம் போன்றவையும் அமைந்திருக்கும்.


பிக்பென் கோபுரம்


உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக

வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions

the SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி





# உயிராபத்தாக முடியும் செவ்வாய் கிரக பயணம்

## நாசா எச்சரிக்கை

பூமிக்கு அடுத்தபடியாக மனிதர்கள் வாழக்கூடிய கிரகமான செவ்வாய்க்குச் செல்வதற்கு முன்னர் நன்கு யோசிக்க வேண்டும் என்றும் அது உயிருக்கு பேராபத்தானது என்றும் நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.



செவ்வாய் கிரக பயணத்தில் ஈடுபடும் விண்வெளி வீரர்கள் 'லீயூகேமியா' என்ற நோய்க்கு ஆளாகும் நிலை மிக அதிகம் என நாசா நிறுவனம் உறுதிசெய்துள்ளது. பூமியிலிருந்து செவ்வாய் கிரகத்திற்குப் பயணிப்பதற்கு 140 மில்லியன் மைல் தூரத்தை மூன்று ஆண்டுகள் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறான பயணத்தில் திறந்த விண்கல ஆய்வுகூடத்தில் படும் கதிர்வீச்சின் அளவிலேயே ஒரு எலியை வைத்து நாசா நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டது. இதன்போது, இரு வாரங்களில் அந்த எலியின் குருதி விஷமடைந்து அதன் உடலில் புற்றுநோய் கலங்கள் விரைவாக வளர்ச்சி அடைந்தன. அத்தோடு, எலியின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி தொகுதி மிக மோசமாக சேதமடைந்ததோடு, உடல் பலவீனமடைந்தது. இவ்வாறான ஆய்வின்மூலமே செவ்வாய்க்கான பயணம் உயிராபத்து மிக்கது என நாசா தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, இவ்வாறு பல தடைகளைத் தாண்டி செவ்வாய் கிரகத்தை அடைந்த பின்னர், அங்குள்ள காலநிலைக்கேற்ற ஆடை அணிவதிலும் பல சிக்கல்கள் தோன்றியுள்ளதாக நாசா நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. அந்தவகையில் சந்திரனை சென்றடைந்த வீரர்களான நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஒல்ட்ரின் ஆகியோர் அணிந்த ஆடைத்தொகுதி செவ்வாய் கிரகத்தின் காலநிலைக்கேற்றதல்ல என்றும் நாசா நிறுவனம் தெரிவிக்கின்றது. (-அ)


Bakeer Markar Centre

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகமும்
தேசிய ஒற்றுமைக்கான பாக்கீர் மாக்கார் நிலையமும்
இணைந்து ஒழுங்கு செய்யும்

## பாடசாலை மாணவர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான கட்டுரை / சித்திரப் போட்டி



### பொதுவான வழிகாட்டி :

- கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிக்கான தலைப்பு "வேற்றுமையில் ஒற்றுமையே தேசத்தின் பலம்" ஆகும்.
- இப் போட்டிகளில் அரசாங்க பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களின் மாணவ மாணவிகள் பங்குபற்றலாம்.

### பிரிவுகள் :

- சிரேஷ்ட பிரிவு - தரம் 10 - தரம் 13
- கனிஷ்ட பிரிவு - தரம் 06 - தரம் 09
- ஆரம்ப பிரிவு - தரம் 01 - தரம் 05 (இப்பிரிவு சித்திரப் போட்டிக்கு மாத்திரமே)

- உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படும் ஆக்கமானது பொறுப்பாசிரியர் மற்றும் அதிபர் அல்லது நிறுவனத் தலைவரினால் போட்டியாளரின் படைப்பு என்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படும். மாகாணமட்டத்தில் வெற்றியீட்டியவர்கள் மத்தியிலிருந்து அகில இலங்கை ரீதியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள் தெரிவு செய்யப்படும்.

### பரிசில்கள் :

அகில இலங்கை ரீதியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள்

| | |
|---|---|
| முதலாம் இடம் - | 50,000 ரூபாய் |
| இரண்டாம் இடம்- | 30,000 ரூபாய் |
| மூன்றாம் இடம் - | 25,000 ரூபாய் |

மாகாண ரீதியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள்

| | |
|---|---|
| முதலாம் இடம் - | 15,000 ரூபாய் |
| இரண்டாம் இடம்- | 10,000 ரூபாய் |
| மூன்றாம் இடம் - | 5,000 ரூபாய் |

போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். இப் போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர்கள் அனைவரும் நடுவர்களினாலும் நோக்குனர்களினாலும் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.
- போட்டியாளர்களின் பெயர், கையொப்பம் மற்றும் பாடசாலையின் பெயர் ஆகியவற்றை கட்டுரை, சித்திரம், ஓவியம் ஆகியவற்றில் எழுதக் கூடாது.

### கட்டுரைப் போட்டி

- கட்டுரைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் முன்வைக்க முடியும். கட்டுரைகள் கையால் எழுதப்படல் விரும்பத்தக்கது என்பதுடன் தட்டச்சிடப்படுமாயின் வரிகளுக்கிடையே இரட்டை இடைவெளிவிடப்படுதல் வேண்டியதுடன் அவை கறுப்புமையினால் அச்சிடப்படல் வேண்டும்.
- கட்டுரையில் முடிவானது, வாசிப்போரை ஈர்ப்பதாகவும் சிந்திக்கக் கூடிய விடயமொன்றைக் கூறுவதாகவும் அமைதல் வேண்டும்.
- கட்டுரையில் உள்ளடக்கப்பட வேண்டிய சொற்களின் எண்ணிக்கை:
  சிரேஷ்ட பிரிவு- 500 முதல் 1000 வரை
  கனிஷ்ட பிரிவு- 400 முதல் 600 வரை

### சித்திரப் போட்டி

- அனைத்து பிரிவினரும் சித்திரம் வரையப்படும் தாளின் அளவு 18×14" ஆகும்.
- வரைவதற்காக பயன்படுத்தப்படும் மூலங்கள் : பென்சில், நிறங்கள்,
- சித்திரங்கள் போட்டியாளரின் சொந்த முயற்சியில் சுய உருவாக்கமாக வரையப்படுதல் வேண்டும்.
- உங்களால் வரையப்படும் சித்திரங்களுக்கு எதுவிதப் பாதிப்பும் ஏற்படாதவாறு அனுப்பப்படல் வேண்டும். முடியுமாயின் 'கூரியர்' (Courier) சேவையில் அனுப்பவும்.

ஆக்கங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2017 மார்ச் மாதம் 31ஆம் திகதி ஆகும். உங்களது விண்ணப்பங்கள் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள், பணிப்பாளர், தேசிய தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம், இல.21, 6ஆம் மாடி, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வண்டும்.

### பாடசாலை மாணவர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான கட்டுரை / சித்திரப் போட்டிக்கான விண்ணப்பம்

போட்டியாளரின் முழுப் பெயர்: ..................................................

வகை: (கட்டுரை/சித்திரம்)....................(சிரேஷ்ட/கனிஷ்ட/ஆரம்ப)...............

வயது :..............................

பிறந்த திகதி:- நாள்.............. மாதம்:............ ஆண்டு:.............

பால்: (ஆண்/பெண்):...........................

பாடசாலையின் பெயர், முகவரி:..................................................

தொலைபேசி இலக்கம்: ..........................

இக்கட்டுரை/சித்திரம் என்னுடைய சொந்த ஆக்கம் என்பதனை இத்தால் உறுதி செய்கிறேன்.

போட்டியாளரின் கையொப்பம்:........................ திகதி:..........................

பாடசாலை அதிபர் / நிறுவனத்தின் தலைவரின் உறுதிச்சான்று

இந்த விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள கட்டுரை/சித்திரம் விண்ணப்பதாரியின் சொந்த முயற்சியால் ஆக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் உறுதிசெய்கிறேன்.

.................... ....................
பொறுப்பாசிரியர் அதிபர் / நிறுவனத் தலைவர்

திகதி. ..........................

( பாடசாலை / நிறுவனத்தின் முத்திரை)

ஊடக அனுசரணை: DailyMirror விஜய்


noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மா, மகள், மகன் ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

அම්මා: කොහෙන්ද පුතා මේ එළවළු?
கொஹென்த புதா மே எளவளு?
**அம்மா: எங்கிருந்து மகன் இந்த மரக்கறிகள்?**

පුතා: අපේ එළවළු කොටුවේ එළවළු අම්මේ.
அப்பே எளவளு கொட்டுவே எளவளு அம்மே.
**மகன்: எமது மரக்கறித் தோட்டத்தின் மரக்கறிகள் அம்மா.**

දුව: ඔව් අම්මේ, අපේ කොටුවේ හොඳට එළවළු හැදිලා.
ஒவ் அம்மே, அப்பே கொட்டுவே ஹொந்தட்ட எளவளு ஹெதிலா.
**மகள்: ஆம் அம்மா, எமது தோட்டத்தில் நன்றாக மரக்கறிகள் விளைந்திருக்கின்றன.**

අම්මා: අපි හෙට දවල්ට උයමු.
அப்பி ஹெட்ட தவல்ட்ட உயமு.
**அம்மா: நாம் நாளை பகல்வேளைக்கு சமைப்போம்.**

දුව: මම මුකුණුවැන්නත් කඩාගෙන ආවා.
மம முகுணுவென்னத் கடாகென ஆவா.
**மகள்: நான் பொன்னாங்கண்ணியும் பறித்துக்கொண்டு வந்தேன்.**

අම්මා: කතුරුමුරුංගා ගෙනාවේ නැද්ද?
கத்துருமுருங்கா கெனாவே நெத்த?
**அம்மா: அகத்திக்கீரை கொண்டு வரவில்லையா?**

දුව: නැහැ අම්මා. හවසට ඒවා මැළවිලානේ.
நெஹெ அம்மா. ஹவசட்ட ஏவா மெழவிலானே.
**மகள்: இல்லை அம்மா. பின்னேரத்தில் அவை வாடிப்போயிருக்குமே.**

අම්මා: පුතා, හෙට නැන්දාටත් එළවළු ටිකක් ගිහින් දෙන්න.
புதா, ஹெட்ட நெந்தாட்டத் எளவளு டிக்கக் கிஹின் தென்න.
**அம்மா: மகன், நாளை மாமிக்கும் மரக்கறிகள் கொஞ்சம் கொண்டுபோய்க் கொடுங்கள்.**

දුව: අපි දැන්ම අරගෙන යනවා අම්මේ.
அப்பி தென்ம அரகென யனவா அம்மே.
மகள்: நாம் இப்போதே கொண்டு போகிறோம் அம்மா.

පුතා: එතකොටනේ අලුත් එළවළු.
எதகொட்டனே அலுத் எளவளு.
மகன்: அப்போதுதானே புதிய மரக்கறிகள்.

**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. தோட்டத்தின் மரக்கறிகள்.
........................................
2. பகல்வேளைக்கு சமைப்போம்.
........................................
3. இப்போதே கொண்டு போகிறோம்.
........................................




## 'Is' எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லின் இறந்தகால வடிவம் 'was'

**'Is'** எனும் நிகழ்கால துணை வினைச்சொல்லைத் தனியாகக் கையாண்டு அமைக்கப்பட்ட நிகழ்கால தனி வாக்கியங்களையும், 'was' எனும் இறந்தகால துணை வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட இறந்தகால தனி வாக்கியங்களையும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) He is in the class now.
அவன் இப்பொழுது வகுப்பில் இருக்கிறான்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஆ) He was at home yesterday.
அவன் நேற்று வீட்டில் இருந்தான்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ **மேற்காணும் வாக்கியங்களின்படி:**

அ) He is.
அவன் இருக்கிறான்.
(நிகழ்காலம்)

ஆ) He was.
அவன் இருந்தான்.
(இறந்தகாலம்)

★—★—★—★

இ) She is in the library now.
அவள் இப்பொழுது நூலகத்தில் இருக்கிறாள்.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஈ) She was in the book shop yesterday.
அவள் நேற்று புத்தகசாலையில் இருந்தாள்.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ **மேற்காணும் வாக்கியங்களின்படி:**

★ She is.
அவள் இருக்கிறாள். (நிகழ்காலம்)

★ She was.
அவள் இருந்தாள்.
(இறந்தகாலம்)

★—★—★—★

உ) It is in the garden now.
அது இப்பொழுது தோட்டத்தில் இருக்கிறது.
(நிகழ்கால தனி வாக்கியம்-Present simple tense)

ஊ) It was in the kitchen last night.
அது கடந்த இரவு சமையலறையில் இருந்தது.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

★ It is.
அது இருக்கிறது. (நிகழ்காலம்)

★ It was.
அது இருந்தது.
(இறந்தகாலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவவெளியீட்டுப்பகுதி

# ஃபெடரருக்கு மற்றுமொரு வெற்றி



இம்முறை 'இந்தியன் வேல்ஸ்' டென்னிஸ் போட்டித் தொடரில் சுவிட்சர்லாந்தின் ரொஜர் பெடரர் மீண்டும் செம்பியன் ஆகியுள்ளார். சுவிட்ஸர்லாந்தின் ஸ்டெனிஸ்லஸ் உவ்ரின்கா என்பவரை 2-0 என்ற கணக்கில் தோற்கடித்தே, கிண்ணத்தை ஃபெடரர் கைப்பற்றியுள்ளார். அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற இப்போட்டியில் 6-4, 7-5 என்ற செட் கணக்கிலேயே ஃபெடரர் வெற்றியீட்டினார்.

43 ஆவது தடவையாக நடைபெற்ற 'இந்தியன் வேல்ஸ்' டெனிஸ் போட்டியில் ஃபெடரர் இம்முறை வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்திருப்பது இது 5 ஆவது தடவையாகும்.



# ஐசிசி யின் தலைவராக திலங்க தெரிவாகலாம்

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் [ஐசிசி] புதிய தலைவராக இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தற்போதைய தலைவரான திலங்க சுமதிபால நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை இப்பதவியிலிருந்த இந்தியாவைச் சேர்ந்த மனோகர் பதவி விலகியதன் காரணத்தினாலேயே இப்பதவிக்கு திலங்க சுமதிபால நியமிக்கப்படலாம் என கருதப்படுகின்றது. உறுப்பு நாடுகளுக்கிடையே நடத்தப்படக்கூடிய வாக்கெடுப்பில் வெற்றிபெறும் பட்சத்திலேயே திலங்க இப்பதவிக்கு நியமிக்கப்படுவார். தற்போதைய நிலவரத்தின்படி, அதிக எண்ணிக்கையிலான உறுப்பு நாடுகள் திலங்க சுமதிபாலவிற்கு ஆதரவாக வாக்களிக்க முன்வந்திருப்பதாக தெரிய வருகின்றது.

குறிப்பாக, தெற்காசிய நாடுகளின் ஆதரவை திலங்க பெறுவார் என கூறப்படுகின்றது. முதலில் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுப் பின்னர் ஜுன் மாதம் நடத்தப்படும் தேர்தலினூடாக, ஐசிசியின் உத்தியோகபூர்வ தலைவர் பதவி நியமனம் இடம்பெறும்.




# பங்களாதேஷ் பெறும் அனுகூலங்கள்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கை அணியை டெஸ்ட் போட்டியில் தோற்கடித்தமையின் காரணமாக, பங்களாதேஷ் அணி பெற்றுக்கொண்டுள்ள அனுகூலங்கள் வருமாறு;

- ★ இதுவரை காலமும் பங்களாதேஷ் அணியை பொருட்படுத்தாதிருந்த முதன்மை நிலை அணிகள் இனிமேல் பங்களாதேஷ் அணிக்கு உரிய மரியாதையை வழங்கலாம்.
- ★ பங்களாதேஷ் அணிக்கு இனிமேல் அதிக எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகள் வழங்கப்படலாம்.
- ★ பங்களாதேஷ் அணி அச்சுறுத்தலான அணியாக இனிக் கருதப்படலாம்.
- ★ உலகக் கிண்ணப் போட்டிகளில் போட்டிகளுக்கான பிரிவுகளை அமைக்கும்போது, பங்களாதேஷும் முதன்மை நிலை அணி என்ற வகைக்குள் சேர்க்கப்படலாம்.

# ஐசிசி டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியல்

ஐசிசி யின் டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியல் கடந்த வாரம் வெளியாகியுள்ளது. இலங்கை-பங்களாதேஷ் போட்டிகள் நியூஸிலாந்து-தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா-அவுஸ்திரேலியா ஆகிய போட்டிகளில் வெளிப்படுத்தப்பட்ட திறமைகளின் அடிப்படையில் இந்த தரப்படுத்தல் பட்டியல் அமைக்கப்பட்டுள்ளது.



## துடுப்பாட்ட வீரர்கள்

01. ஸ்டீவன் ஸ்மித் (அவுஸ்திரேலியா)
02. புஜாரா (இந்தியா)
03. ஜோ ரூட் (இங்கிலாந்து)
04. கோஹ்லி (இந்தியா)
05. விலியம்ஸன் (நியூஸிலாந்து)
06. அசார் அலி (பாகிஸ்தான்)
07. யூனிஸ்கான் (பாகிஸ்தான்)
08. வோனர் (அவுஸ்திரேலியா)
09. அம்லா (தெ.ஆபிரிக்கா)
10. கிவின்டன் ஜொக் (தெ.ஆபிரிக்கா)

## பந்து வீச்சாளர்கள்

01. ஜடேஜா (இந்தியா)
02. அஷ்வின் (இந்தியா)
03. ரங்கன ஹேரத் (இலங்கை)
04. கோஷ் எசல்வுட் (அவுஸ்திரேலியா)
05. என்டர்சன் (இங்கிலாந்து)
06. ஸ்டேன் (தெ.ஆபிரிக்கா)
07. ஸ்டுவர்ட் (இங்கிலாந்து)
08. ரபாடா (தெ.ஆபிரிக்கா)
09. வர்னன் (தெ.ஆபிரிக்கா)
10. நீல்வெஃனர் (நியூஸிலாந்து)



Digitized by Noolaham Foundation.

# இஸ்லாமிய உலகின் விண்வெளிப் பிரவேசம்

ஐக்கிய அரபு அமீரகம் (UAE - United Arab Emirates), அரேபிய தீபகற்பத்தில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இதன் தலைநகரம் அபுதாபி ஆகும். பெரிய நகரம் டுபாய். உலகின் மிகவும் உயரமான கட்டடமாக கருதப்படும் 'பேர்ஜ் கலீபா' டுபாய் நகரில்தான் அமைந்துள்ளது. இவ்வாறு பல சிறப்புகளைக் கொண்டுள்ள ஐக்கிய அரபு அமீரகம், மற்றுமொரு சாதனையைப் படைப்பதற்கு தயாராகி வருகின்றது. செவ்வாய் கிரகத்தில் முதன்முதலில் நகரம் ஒன்றினை அமைப்பதற்கு இந்நாடு தயாராகி வருகின்றமையே அந்த சாதனைக்குரிய விடயமாக கருதப்படுகின்றது.

அந்தவகையில், 2117ஆம் ஆண்டளவில் செவ்வாயில் முதலாவது நகரம் நிர்மாணிக்கப்படும் எனக் கூறப்படுகின்றது. நூற்றாண்டு வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே, இந்நகர் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் 138 நாடுகள் கலந்துகொண்ட உலக மாநாடொன்றின்போதே, இந்த விடயம் பற்றி உலகுக்கு முதலில் அறிவிக்கப் பட்டது.

## 2117 செவ்வாய் செயற்றிட்டம் அறிமுகம்

'2117 செவ்வாய் செயற்றிட்டம்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டத்தினை, அண்மையில் ஐக்கிய அரபு அமீரகத்தின் உப ஜனாதிபதியும் பிரதமருமான ஷேக் முஹம்மத் பின் ரசீத் அல் மக்தூம் அறிமுகம் செய்து வைத்தார். இந்த நிகழ்வில் அபுதாபியின் முடிக்குரிய இளவரசரான ஷேக் முஹம்மத் பின் சயித் அல் நஹ்யானும் கலந்துகொண்டார்.

மனிதன் செவ்வாயில் தரையிறங்கிய பின்னர் அதன் மேற்பரப்பில் உணவு மற்றும் எரிபொருள் தேவைகளை எவ்வாறு நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதை ஆராய்ந்தே இந்த நகரத்தினை நிர்மாணிக்கவுள்ளதாக 2117 செவ்வாய் செயற்றிட்ட பிரதானிகள் இந்த நிகழ்வின்போது குறிப்பிட்டுள்ளனர்.

## மனிதன் செவ்வாய் செல்வது சாத்தியமா?

தொழில்நுட்பம் எவ்வளவுதான் வேகமாக முன்னேறினாலும், செவ்வாயின் ரகசியங்களை இதுவரை மனிதனால் சரிவர அறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது. செவ்வாய் பயணத்திற்குத் தேவையான எரிபொருளை சேமிப்பதில் உள்ள சிக்கல், செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை எடுத்துச் செல்வதற்கேற்ற விமானங்கள் மற்றும் ரொக்கெட்டுக்கள் இதுவரை தயாரிக்கப்படாமல் இருக்கின்றமை, செவ்வாய் சென்றால் உயிர்வாழ முடியும் என்பது குறித்து உறுதியாகக் கண்டறியப்படாமை போன்ற பல்வேறு காரணங்கள் செவ்வாய் பயணத்திற்கான தடைகளாக காணப்படுகின்றன.

அத்துடன், செவ்வாய்க்கான பயணத்தினை மிக இலகுவாக மேற்கொள்ளவும் முடியாது. அதற்கு குறைந்தது ஒன்றரை அல்லது இரண்டு வருடங்களாவது தேவைப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஐக்கிய அரபு அமீரகத்
உப ஜனாதிபதியும்
பிரதமருமான ஷேக் முஹ
பின் ரசீத் அல் மக்தூ



இளவரசர் சுல்தான் பி
சல்மான் அல் சவூத்

## கனவை நனவாக்குதல்

"பிரபஞ்சத்தினை வெற்றிகொண்டு இதர கிரகங்களுக்கு செல்வது மனிதனின் எதிர்கால குறிக்கோள்களில் ஒன்றாகும். இந்த கனவினை நனவாக்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது மிகவும் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐக்கிய அரபு அமீரகம் அதற்கான ஏற்பாடுகளை விரைவாக மேற்கொண்டு வருகின்றது. விண்வெளி நடவடிக்கைகள் தொடர்பில் பெருமளவான முதலீடுகளை மேற்கொள்ளும் வசதியும் நிதியும் உள்ள நாடுகளில் ஐக்கிய அரபு அமீரகமும் உள்ளடங்குகின்றது" என '2117 செவ்வாய் செயற்றிட்டம்' குறித்த அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஷேக் முஹம்மத் பின் ரசீத் அல் மத்தூம் குறிப்பிட்டுள்ளனர். இந்த நிகழ்வின்போது, செவ்வாய்க் கிரகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள முதலாவது நகரம் குறித்த கணினி உருவாக்கப் படம் காட்டப்பட்டதோடு, அது பற்றிய செயற்பாடுகள் குறித்தும் விபரிக்கப் பட்டன.



ஐக்கிய அரபு அமீரகத்தின் பொறியியலாளர்கள் மற்றும் படைப்பாளிகள் இணைந்து திட்டமிட்டுள்ள செவ்வாய் நகரத்தின் கணினி உருவாக்கப் படம்

13ஆம் நூற்றாண்டு வரை பல வருடங்களாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் முக்கிய பங்காற்றிவந்தனர். பிற்காலத்தில் இந்தப் போக்கில் வீழ்ச்சி நிலை காணப்பட்டது. செவ்வாய் நகர செயற்றிட்டத்தின்மூலம் இஸ்லாமிய உலகம் விண்வெளி நடவடிக்கைகளில் மீண்டும் பங்குகொள்வதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளதாக அமீரகத்தின் ஆட்சியாளரும் ஜனாதிபதியுமான ஷேக் கலீபா பின் சயித் அல் நஹ்யான் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அல்ஜீரியா, டியூனீசியா, எகிப்து, துருக்கி, இந்தோனேஷியா, பாகிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகள் ஏற்கனவே விண்வெளி முகவர் நிலையங்கள் அல்லது செயற்றிட்டங்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் முதலாவது நகரம்!

## அமைக்கத் தயாராகிறது ஐக்கிய அரபு அமீரகம்...



### செவ்வாய் திட்டம்

செவ்வாய்க்கான பயணம் மிகவும் சிரமமானது மட்டுமன்றி, இதற்கு உதவியாக தொடங்கப்பட்ட பல திட்டங்கள் தோல்வியில் முடிவடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. **1960** முதல் செவ்வாயில் ஆய்வுக்காக பல்வேறு விண்கலங்கள் அனுப்பப்பட்ட போதும், அவற்றில் **50** சதவீதமானவையே வெற்றியளித்துள்ளன. செவ்வாய்க்கான ஆய்வுத் திட்டங்களில் நாஸா மட்டுமே இதுவரை வெற்றி பெற்றுள்ளது. எனினும், **1960**ஆம் ஆண்டு தொடக்கம் நாஸாவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள **21** திட்டங்களில் **6** திட்டங்களே வெற்றியளித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.


அமெரிக்க நாஸா நிறுவனம், ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலையம் மற்றும் இந்திய விண்வெளி ஆய்வு நிலையம் ஆகிய நான்கு நிறுவனங்களே **1965**ஆம் ஆண்டின் பின்னர் செவ்வாய் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. ஜப்பான் மற்றும் சீனா என்பன மனிதர்கள் அற்ற ரொபோ விமானங்களை செவ்வாய்க்கு அனுப்ப முயற்சித்தபோதிலும், அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

### முதலாவது முஸ்லிம் விண்வெளி வீரர்

உலகின் பல பகுதிகளில் இருந்தும் முஸ்லிம் விண்வெளி வீரர்கள் உருவாகியுள்ளனர். சவூதியில் பிறந்த சுல்தான் பின் சல்மான் அல் சவூத் இளவரசரே, விண்வெளிக்கு சென்ற முதலாவது முஸ்லிம் விண்வெளி வீரர் என்ற பெருமையைப் பெற்றவராவார். இந்நிகழ்வு 1985ஆம் ஆண்டு நிகழ்ந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கத்தின் பறவை







படத்தில் காட்டப்பட்டுள்ள இந்த பறவையினங்களை பெரும்பாலும் இந்தோனேஷியா, பப்புவா நியூகினி, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள காடுகளில் காணமுடியும். ஆரம்பகால கட்டத்தில் இந்த பறவை இனம் 'சந்திரவாசி' என அழைக்கப்பட்ட போதும், 16 ஆம் நூற்றாண்டில் பப்புவா நியூகினியிலுள்ள காடுகளுக்குள் சென்ற ஸ்பானிய நாட்டவர் இந்தப் பறவை இனத்தைக் கண்டு இந்தப் பறவைகள் சொர்க்கத்தில் இருந்து வந்ததாகக் கருதினர். அதனால், ஸ்பானிய மொழியில் 'சொர்க்கத்தின் பறவை' என பொருள்படும் வகையில் Birds of Paradise என்ற பெயரை சூட்டினர். அத்தோடு, 19 ஆம் நூற்றாண்டில் இருந்து மேற்கேத்திய பெண்கள் இந்த பறவையின் அழகான சிறகுகளை தமது தொப்பிகளில் பொருத்தி அணியும் பழக்கத்தையும் கொண்டிருந்தனர்.

# ஆண், பெண் இனங்களை ஓர் உடலில் கொண்ட கடல்வாழ் உயிரினம்





கடலில் வாழும் உயிரினங்களில் கடற்சிப்பியினத்தை சார்ந்த 'ஆளிகள்' எனப்படும் ஒய்ஸ்டர் (Oyster) இனத்தின் உடற்தொகுதியில் ஆண், பெண் இனங்கள் இணைந்துள்ளன. இந்த ஆளிகள் பிறந்து மூன்றாண்டுகளில் பருவமடைகின்றன. அப்போது அவை ஆண் இனமாக இருக்கும். சில வாரங்களில் இவை பெண் இனமாக மாறி 60,000,000 முட்டைகளை இடும். அதன்பின்னர் ஆண்களாக மாறி, ஓய்வு எடுக்கின்றன. இவ்வாறான சுழற்சி முறையின்மூலம் கடல்வாழ் சிப்பிகளான ஆளிகள் உயிர்வாழ்கின்றன.

# மாணவர்கள் முகநூல் (Facebook) பயன்படுத்துவது நன்மையா? தீமையா?

## கட்டுரைப் போட்டி



**முதலாவது பரிசு**
**மடிக்கணினி (Laptop)**
**25 பேருக்கு சான்றிதழ்கள்**




**முடிவு திகதி நீடிப்பு**

மாணவர்கள் Facebook முகநூல் பயன்படுத்துவது நன்மையா? தீமையா? இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

இதனை ஒரு போட்டியாக நடத்த உத்தேசித்துள்ளோம்.

1. முகநூல் பயன்படுத்துவது நன்மையே...
2. முகநூல் பயன்படுத்துவது தீமையே

இதில் உங்களுக்கு விருப்பமான ஒரு தலைப்பில் உங்கள் கருத்தை எழுதலாம்.

### பரிசு விபரம்

சிறந்த கருத்தை எழுதும் முதலாவது வெற்றியாளருக்கு

- ★ மடிக்கணினி (லெப்டொப்)
- ★ மேலும் 25 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்

### நிபந்தனைகள்

★ உங்கள் ஆக்கங்கள் 'புள்ஸ்கெப்' தாளில் ஒன்றரைப் பக்கத்திற்குள் அடங்குவதாக இருத்தல் வேண்டும்.

★ உங்கள் ஆக்கத்துடன், இங்கு பிரசுரமாகியுள்ள கூப்பன் இணைக்கப்பட வேண்டும்.

★ உங்கள் ஆக்கங்கள் ஏற்கனவே எதிலும் பிரசுரமானதாகவோ, ஒலி-ஒளி பரப்பப்பட்டதாகவோ இருத்தல் கூடாது.

### கூப்பன்

தலைப்பு: ..................................................

பெயர்: .................................... வயது:............

முகவரி: ..................................................

..................................................

..................................................

தொ.பே.இல: ..................................................

பாடசாலை: ..................................................

.................................... வகுப்பு:..........

பெற்றோர் பெயர்: ..................................................

பெற்றோர் கையொப்பம் ..................................................

கையொப்பம் ..................................................

**போட்டி முடிவு திகதி 30.04.2017**

அனுப்ப வேண்டிய முகவரி:

கட்டுரைப் போட்டி
'விஜய்'
த.பெ.எண்.2057
கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








# மட்டக்களப்பு தலைவாயில்...

மட்டக்களப்பு தலைவாயில் மற்றும் காந்திப் பூங்கா என்பன மட்டக்களப்பு வாழ் மக்கள் நன்றாக அறிந்த, தெரிந்த ஓர் இடமாகும். இந்த இடங்கள் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களாகத் திகழ்கின்றன. இந்த மட்டக்களப்பு தலைவாயிலும் காந்திப் பூங்காவும் புளியந்தீவு பகுதியிலேயே அமைந்துள்ளன. அந்நிய தேசத்தவர்கள் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னர் இந்த தீவானது, இலங்கையிலிருந்து தனித்த நிலப்பகுதியைக் கொண்ட ஒரு தனித் தீவாகவே இருந்தது. எனவே, இந்த தீவிற்கு மக்கள் சென்று வருவதற்கு சிறிய ரக படகுகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறு சென்று வருகின்ற படகுகள் மேற்குறிப்பிட்ட தலைவாயில் பகுதியிலேயே தரித்தன. எனவே, இப்பகுதி புராதன துறைமுக தரையிறக்கப்பகுதியாகவும் இருந்து வந்தது.

மட்டக்களப்பானது, ஆரம்ப காலங்களில் மெதடிஸ்ட் சமயத்தைப் பின்பற்றிய மக்களை அதிகம் கொண்ட ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. ஜோர்ஜ் அர்ஸ் கைன் மற்றும் வில்லியம் ஒல்ட் ஆகிய இரண்டு மெதடிஸ்ட் சமய நற்செய்தியாளர்கள் 1814 ஆம் ஆண்டில் இந்த தலைவாயிலுக்கு அருகில்தான் முதன்முதலில் வந்து இறங்கியுள்ளனர். இந்த தலைவாயிலுக்கு அருகிலேயே மட்டக்களப்பு கோட்டையும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் உச்சியின் மீதேறிப் பார்த்தால் களப்பு, தற்போதய மட்டக்களப்பு நகரம், கல்லடிப் பாலம் ஆகியவற்றையும் கண்டு களிக்க முடியும்.

1628 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த கோட்டையானது, பின்னர் 1638 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி ஒல்லாந்தரின் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்பட்டு அதன் பின்னர் 1745 ஆம் ஆண்டு தொடக்கம் பிரித்தானியரின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. மட்டக்களப்புக்கு விஜயம் செய்பவர்களுக்கு இவற்றை இன்றும் வரலாற்று அடையாளங்களாக நேரில் காண முடியும்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்

தென் மேற்கு ஆசியாவின் மத்தியில் அமைந்துள்ள ஈராக் நாட்டினை 1920 ஆம் ஆண்டளவில் பிரித்தானியர் கைப்பற்றினர். இதன் விளைவால் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தினால் 1932 ஆம் ஆண்டு இந்நாடு சுதந்திரம் அடைந்தது. அதன் பின்னர் இந்நாடு முடியரசாகத் திகழ்ந்த போது 1958 ஆம் ஆண்டு இராணுவ சூழ்ச்சியால் முடியாட்சி வீழ்த்தப்பட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அதனை தொடர்ந்து, இங்குள்ள பல்வேறு இனக்குழுக்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக இணைந்து தமக்கென தனித்துவமான ஆட்சியொன்றை அமைத்தனர்.

குர்திஸ்தான் மக்கள் இந்நாட்டின் குடிகளாவார்.

இந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனும் அவரது குடும்பத்தினரும் இந்நாட்டின் வரலாற்றில் தனித்துவமாகத் திகழ்ந்தனர்.

கி.மு 4000 ஆம் ஆண்டளவில் இந்நாடு சுமேரியன் ஆட்சியின்கீழ் இருந்தது.

16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் முதலாம் உலக யுத்தம் வரை ஒட்டோமன் துருக்கியர் இந்நாட்டை ஆட்சி செய்தனர்.

மலைப்பாங்கான பிரதேசங்களும் பாலைவனங்களும் காணப்படுகின்றது.

## தேசிய மிருகமும் மலரும்

தேசிய மிருகம் - காட்டு ஆடு
தேசிய மலர் - ரோசாப் பூ
தேசிய பறவை - ச்சுகர் பெட்ரிஜ்

## இனங்கள்

80% அராபி
15% குர்தி
05% டர்கோமன், அசரியன், ஏனையோர்

## மொழிகள்

அராபி (உத்தியோகபூர்வ மொழி)
குர்தி (உத்தியோகபூர்வ மொழி)
டர்க்மன், அசரியன், மற்றும் ஆர்மேனியன்

## சமயம்

இஸ்லாம் 99% (ஷியா 65% சுன்னி 35%)
கிறிஸ்தவம் 0.8% மற்றும் இந்து, பௌத்தம், யூதம், பாரம்பரிய மதங்கள், சமயசார்பற்றோர் மற்றும் ஏனையோர்

## அரசியல்

நாடாளுமன்றத்தின் உட்பகுதி



பிரதமர் ஹைதர் அல் ஹபாதி




## தலைநகரமும் பெரிய நகரமும்

கி.பி. 762 ஆம் ஆண்டில் ஈராக்கின் தலைநகரமாக பாக்தாத் உருவாகியது.

## இயற்கை வளம்

மசகு எண்ணெய், இயற்கை வாயு, பொஸ்பேற்று, சல்ஃபர்.

மத்திய கிழக்கு நாடுகளில் இரண்டாவது மிகப் பெரிய மசகு எண்ணெய் வளமுள்ள நாடாக இந்நாடு திகழ்கின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அராபிய செம்பிறைச் சங்கம் என்பன போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி வருகின்றன.

சுன்னி பயங்கரவாதப் பிரிவு, இஸ்லாமிய அரசை தோற்கடிக்க 2017 ஆம் ஆண்டு மீண்டும் போராட முனைந்தது.



நாணயம் - ஈராக் டினார்.

பாரம்பரிய உடையும் அணி கலன்களும்.

பாரம்பரிய நடனம்.

பயிர்ச்செய்கையோடு, கால்நடை வளர்ப்பையும் இங்குள்ள மக்கள் மேற்கொள்கின்றனர்.

1958 ஆம் ஆண்டு முதல் 1968 ஆம் ஆண்டு வரை இந்நாடு இராணுவ ஆட்சியின் கீழ் இருந்தது.

1991 ஆம் ஆண்டில் வளைகுடா யுத்தத்தால் இங்கு பாரிய தாக்கங்கள் ஏற்பட்டன.

2003 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பின் பின்னர் சதாம் ஹுசைனின் ஆட்சி வீழ்த்தப்பட்டது.



இஸ்லாமிய பள்ளிவாசல்.

# இலங்கையின் தேசிய வனங்கள்

## யால தேசிய வனம்



இலங்கையின் தேசிய வனங்களில் ஒன்றாக யால தேசிய வனம் திகழ்கின்றது. இந்த வனம் 97,880 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்டது. இது இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை உறுகுண தேசிய வனம் எனவும் குமண தேசிய வனம் எனவும் அழைக்கப்படுகின்றது. இங்கு யானை, நீரியல் பறவைகள் என்பன பாதுகாக்கப்படுகின்றன.

## உடவளவை



இந்த தேசிய வனமானது, மொனராகல, இரத்தினபுரி மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளது. இந்த வனம் 30,821 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்டது. புல் நிலங்களாலும், சிறிய தேக்குக் காடுகளாலும் இவ்வனம் சூழப்பட்டுள்ளது. 400 இற்கு மேற்பட்ட யானைகள் மற்றும் சிறுத்தை, பொன்னிற நரி, நீர் எருமை என பல்வேறுபட்ட உயிரினங்கள் இங்கு வாழ்கின்றன.

## புந்தல

இது தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அருகில் அமைந்துள்ளது. வெளிநாடுகளில் பருவ மாற்றத்திற்காக இடம்பெயரும் பல பறவைகள் இங்கு வந்தடைகின்றன. 3339 ஹெக்டெயர் பரப்பளவைக் கொண்ட இலங்கையின் முதலாவது ஈரவலய தேசிய வனமாகவும் இது திகழ்கின்றது.



## வஸ்கமுவ

இந்த வனம் மாத்தளை, பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 39,322 ஹெக்டெயர் ஆகும். இலங்கைக்கே உரிதான விலங்குகளையும் தாவரங்களையும் இங்கு காண முடியும்.



## கல்லோயா

இக்காடு கிழக்கு மாகாணத்திலுள்ள சேனநாயக்கா சமுத்திரத்தின் அருகில் உள்ள இங்கினியாக்கலை பகுதியில் அமைந்துள்ளது. ஆயுர்வேத மருத்துவத்தின் மருத்துவ மூலிகையான கடுகாய், தான்றி, நெல்லி என்பன இங்கு அதிகமாக காணப்படுகின்றன. இதன் பரப்பளவு 25,900 ஹெக்டெயர் ஆகும்.



## ஹோர்ட்டன் சமவெளி

இலங்கையின் கடல் மட்டத்தில் இருந்து 7,200 அடி உயரத்தில் அமைந்துள்ள வனம் இதுவாகும். இதன் பரப்பளவு 3,160 ஹெக்டெயர் ஆகும். இங்கு பத்தனைப் புல்நிலங்களும் பசுமையான மலைக்காடுகளும் காணப்படுகின்றன. உயிரினப் பல்வகைமை கொண்ட வனமாகவும் இது திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மிகப் பழமையான நாடாளுமன்றம் ஐஸ்லாந்தில் அமைந்துள்ளது. இந்த நாடாளுமன்றம் அல்திங் (Althing) என அழைக்கப்படுகின்றது. இந்த நாடாளுமன்றத்தின் ஆயிரமாவது ஆண்டு விழா 1930 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தின் தலைநகரான ரேய்க்ஜெவிக் நகரில் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆயிரம் ஆண்டுகள் தாண்டி இயங்கும் நாடாளுமன்றம்

## தெரிந்து கொள்வோம்

மகாவம்சம் முதன் முதலாக எந்த மொழியில் எழுதப்பட்டது?

பாளி மொழியில்

இலங்கையின் முதலாவது பெண் மேயர் யார்?

சந்திரா ரணராஜா





உலகைச் சுற்றி வந்த மின்கல விமானத்தின் பெயர் என்ன?

சோலார் இம்பிள்ஸ் -2

குத்துச் சண்டையின் தந்தை யார்?



ஜெக் பிரௌடன்



பின்வரும் பிரபல்யமான கதாபாத்திரங் களை உருவாக்கிய கதாசிரியர்கள் யார்?


சூப்பர்மேன்: ஜோ ஷுஸ்டர் - ஜெர்ரி சீகல், மிக்கி மவுஸ்: வேர்ல்ட் டிஸ்னி.



முதலாவது உலக மகா யுத்தம் எக்காலப்பகுதியில் நடைபெற்றது?

28 ஆம் திகதி ஜூலை மாதம் 1914 தொடக்கம் 11 ஆம் திகதி நொவெம்பர் மாதம் 1918 ஆம் ஆண்டு வரை

## பாவனைக்கு உதவாத அதியுயர் மின்சக்தி



பூமியை நோக்கி வரும் மின்னலில் 500,000,000 அளவிலான மின்சக்தி உள்ளது. ஆனால், இந்த மின்சக்தியைக் கொண்டு 60 வாட் மின்விளக்கை ஒரே ஒரு நிமிடம் மட்டும்தான் ஒளிர வைக்கமுடியுமாம்.

தொகுப்பு:
உடுவை பரந்தாமன்

## மீண்டுமொரு வாய்ப்பு

# கேள்விக்கென்ன பதில்...?

### பாடசாலை உபகரண வவுச்சர்களை வெல்லுங்கள்




புதிய வாசகர்கள் பலர் பாடசாலை உபகரண வவுச்சர்களை வெல்லும் 'கேள்விக்கென்ன பதில்...?' போட்டியின் சில பகுதிகளை தவறவிட்டதாக குறிப்பிட்டுள்ளனர். எனவே, அவர்களுக்கும் ஒரு வாய்ப்பை வழங்கும் முகமாக; கடந்தவாரம் தொடக்கம் அதே கேள்விகளை தலா 10 வீதம் ஒவ்வொரு வாரத்திலும் பிரசுரித்து வருகின்றோம். தவறவிட்டவர்கள் இவற்றை சேகரித்து மொத்தமுள்ள 40 கேள்விகளுக்குமான விடைகளை எழுதி தபாலிடுங்கள். தபாலிடும் முகவரி இறுதி நாளன்று பிரசுரிக்கப்படும்.

11. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான நாணய அலகு எது?

.......................................................

12. நவீன ஓவியத்தின் தந்தை யார்?

.......................................................

13. உலகின் முதலாவது செயற்கைக் கோள் எது?

.......................................................

14. 'சுனாமி' தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

.......................................................

15. இலங்கையின் இணையக் குறி என்ன?

.......................................................

16. இலங்கையின் மிக நீளமான ஆறு எது?

.......................................................

17. உலகின் மிக பழமையான நாடாளுமன்றம் உள்ள நாடு எது?

.......................................................

18. புல்லாங்குழலில் எத்தனை துளைகள் உள்ளன?

.......................................................

19. திருப்புகழைப் பாடியவர் யார்?

.......................................................

20. சாதாரண உப்பின் இரசாயனப் பெயர் என்ன?

.......................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைல்



உலகின் மிக நீளமான நதிகளில் நைல் நதியும் ஒன்றாகும். 'நைல்' என்ற பெயர் 'நெய்லோஸ்' என்ற கிரேக்க சொல்லில் இருந்தே தோன்றியுள்ளது. கிரேக்க மொழியில் 'நெய்லோஸ்' என்றால், 'ஆறு' என்றே அர்த்தப்படுகின்றது.



★ வெள்ளை நைல், நீல நைல் என நைல் நதி இரு பிரதான கிளைகளாகப் பிரிகின்றது. இந்த இரு கிளை நதிகளும் சூடான் தலைநகர் கார்ட்டூமில் சங்கமிக்கின்றன.


★ நைல் நதியிலும் அதன் கரையோரப் பகுதிகளிலும் பலவகையான உயிரினங்கள் வாழ்கின்றன. அந்தவகையில்; சேற்றுமீன், புலிமீன், விலாங்கு மீன், பூனைமீன் போன்ற பல்வேறு மீனினங்கள் நைல் நதியில் வாழ்கின்றன. இவை தவிர; முதலை, கீரி, ஆமை, நீர்யானை, பெபூன் குரங்கு, தவளை, நைல் பல்லி, விஷப்பாம்புகள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட பறவையினங்களையும் இப்பகுதியில் காணலாம்.

# மிகப் பெரிய உயிரினம்

உலகில் வாழ்கின்ற உயிரினங்களில் மிகப் பெரிய உயிரினமாக 'நீலத்திமிங்கிலம்' கருதப்படுகின்றது. அத்துடன், உலகில் வாழும் பாலூட்டிகளில் மிகப் பெரியது என்ற பெருமையும் நீலத்திமிங்கிலத்திற்கே உரியது.







நீலத்திமிங்கிலம் சுமார் 20 - 30 மீற்றர் நீளத்திற்கு வளரக்கூடியது. சாதாரண அளவிலான நீலத்திமிங்கிலமொன்று 200 தொன் எடையைக் கொண்டிருக்கும். நீலத்திமிங்கிலத்தின் நாக்கின் எடை மட்டும் ஒரு யானையின் எடைக்குச் சமம் எனக் கூறப்படுகின்றது. இதனை வைத்தே அது எந்தளவு பிரமாண்டமானது என்பதை அறிந்துகொள்ளலாம்.

நன்கு வளர்ந்த நீலத்திமிங்கிலமொன்று நாளொன்றுக்கு 3,600 கிலோ கூனிப்பொடிகளை (இறால் போன்ற தோற்றத்தில் காணப்படும் மிகச் சிறிய கடல்வாழ் உயிரினம் - krill) உணவாகக்கொள்ளும். நீலத்திமிங்கிலங்கள் பொதுவாக, மணிக்கு 8 கிலோமீற்றர் வேகத்தில் நீந்தக்கூடியவை. தேவையேற்பட்டால் மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் நீந்தும் ஆற்றலையும் இவை பெற்றுள்ளன.

# மலையைக் குடைந்து உருவான போக்குவரத்துப் பாதை



சீனாவின் ஹெனான் மாகாணத்தில் காணப்படுகின்ற டைஹாங் மலையில் 'குவோலியேங்' எனும் கிராமம் அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் இந்த கிராமத்தில் வாழ்ந்த மக்கள் அருகிலுள்ள நகரங்களுக்குச் செல்வதாயின், அதற்கு வசதியாக இங்கு போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், மக்கள் டைஹாங் மலையில் ஏறி பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே அருகிலுள்ள நகரங்களுக்குச் சென்றனர்.

1971 ஆம் ஆண்டில் இந்த நிலை முற்றாக மாற்றம் பெற்றது. இந்த மலைக்கிராம மக்கள் சுயமாகவே முன்வந்து மலையைக் குடைந்து அதனூடாக போக்குவரத்துப் பாதை ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். அன்றைய காலத்தில் இது மிகவும் சிரமமான பணியாகவே இருந்தது. பாதையை அமைக்கும்போது ஏராளமானோர் விபத்துக்களுக்கு உள்ளாகி உயிரிழந்தனர். எனினும், எஞ்சியிருந்தோர் அந்தப் பணியைத் தொடர்ந்தும் மேற்கொண்டு போக்குவரத்துக்கான பாதையை உருவாக்கினர். இந்த பாதை 5 மீற்றர் உயரமும் 4 மீற்றர் அகலமும் கொண்டுள்ளது. இன்றும்கூட இந்த பாதையூடாக, போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2017, மார்ச் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 29, 2017.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவை உலகம்




விஜய் + PLUS

## மிகப் பெரியது — மிகச் சிறியது

- மிகப் பெரிய பறவை - வட ஆபிரிக்க தீக்கோழி
- மிகச் சிறிய பறவை - தேன் ஓசனிச்சிட்டு

## பறவைகள் பொதுவாக:

- இறகுகளைக் கொண்டிருக்கும்
- முதுகெலும்பு உண்டு
- வளியை சுவாசிக்கும்
- முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்
- ஓர் அலகு, இரண்டு கால்கள், இரண்டு இறக்கைகள் இருக்கும்




-நுஸ்ஜ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


1. ஆகிப், எந்த விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்?
ஆகிப், .................................. விளையாட்டில் ஆர்வமுடையவர்.



2. பறவைகள் எங்கே வசிக்கும்?
பறவைகள் .......................... வசிக்கும்.



3. மேசையின் மீது எத்தனை மிட்டாய்கள் உள்ளன?
மேசையில் .......................... மிட்டாய்கள் உள்ளன.



4. கீதா, அணிய விரும்பும் ஆடை எது?
கீதாவுக்கு .......................... அணிய விருப்பம்.



5. நீங்கள் இப்போது என்ன சாப்பிட விரும்புகிறீர்கள்?
எங்களுக்கு .......................... சாப்பிட விருப்பம்.







**இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக**




**பொருத்தமான வாக்கியங்களைத் தெரிவுசெய்து எழுதுக**




★ உணவை சுவை பார்த்தல்
★ ஆடைகளை அழுத்துதல்
★ பாத்திரங்களைக் கழுவி வைத்தல்
★ செடிக்கு நீரூற்றுதல்
★ தோட்டத்தில் வேலை செய்தல்
★ தரையை சுத்தப்படுத்தல்



தென்னை மரத்தில் காய்த்திடுவேன். சமையலுக்கு உதவிடுவேன். நான் யார்?
......................



விலங்குகளில் பலசாலி நான் ஆவேன். தும்பிக்கையால் மரத்தையும் வீழ்த்திடுவேன். நான்தான்
..............




ஊதா நிறத்தில் காய்த்திடுவேன். உணவுக்காகவும் பயன்படுவேன். நான் யார்?
......................


- ஜீரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவெளிகளை நிரப்புக





## பொருத்தமான நிழற்படத்துடன் இணையுங்கள்







## அறிவுக்கு விருந்து (15.03.2017) விடைகள்







## விடை தருக





## படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை தெரிவுசெய்து உரிய கட்டங்களில் எழுதுக



penguin
hare
walrus
wolf
narwhal
bear
mouse
whale

## குறுக்கெழுத்துப் போட்டி: 233



### மேலிருந்து கீழ்

01. வீட்டைப் பெருக்கத் தேவை.
02. கோடு.
03. சிங்கம். (குழம்பியுள்ளது)
05. கல்லீரலில் இருந்து சுரக்கும் திரவம்.
07. சிறிய.
09. நீள் உருண்டை வடிவத்தைக் குறிக்கும். (தலைகீழ்)
10. ஒருவரின்/ஒரு நிகழ்வின் ஞாபகார்த்தமாக அமைக்கப்படுவது. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. விரைவு.
03. மாவினால் செய்யப்படும் ஓர் உணவுப் பண்டம். (மாறியுள்ளது)
04. மணமகன். (குழம்பியுள்ளது)
06. சுவை.
08. தங்கை-எதிர்ப்பதம். (குழம்பியுள்ளது)
09. உனது.
10. தொலைவு. (குழம்பியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி: 232 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மொ | ச் | சை | | 2 ள | டை |
| ட் | | 3 தோ | | ழ | 4 பு |
| டை | 5 வி | | 6 தி | 7 வா | |
| | ல் | கா | க் | ய் | 8 வா |
| 9 கா | லி | | கு | | ரி |
| ணி | | | | 10 மா | சு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலப்பனை மஹாஊவாவைச் சேர்ந்த எந்தனி நிரோசன் - ஜெனிட்டா தம்பதியரின் செல்வப் புதல்வன் எனோஜன், தனது இரண்டாவது பிறந்த தினத்தை 19.03.2017 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எல். ஜெனிட்டா கிறேஸ்)

மௌஸா பஸார், மடுல்கெலேயைச் சேர்ந்த உவைஸ்- பாத்திமா பஸ்மினா தம்பதியரின் செல்வப் புதல்வன் முகம்மத் பாஸித், தனது இரண்டாவது பிறந்த நாளை 01.04.2017 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: எம்.ரஸ்மி)



விஜய் விழா உலா
த.பெ. எண் 2037
கொழும்பு

மினுவாங்கொடை - கல்லொழுவை, லூத்தா சர்வதேச ஆங்கிலக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் அண்மையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் எம். அப்பான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மினா இல்லம் முதலாம் இடத்தை சுவீகரித்துக் கொண்டதுடன், மதீனா இல்லம், மக்கா இல்லம் என்பன முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குத் தெரிவாகின. கல்லூரியின் பணிப்பாளர் பெரோஸ் ரஹீம், அதிபர் எம். அப்பான், முன்னாள் அதிபர் இனோகா ஜோசப், கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.எச்.எம்.காமில், கல்லொழுவை ஐ.தே.க அமைப்பாளர் அப்துல் கப்பார் ஹாஜி உள்ளிட்ட பிரமுகர்களால், வெற்றியீட்டிய இல்லங்களுக்கும் வீரர்களுக்கும் ஞாபகச் சின்னங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(தகவல்: ஐ.ஏ.காதிர் கான்)




என். தனிஸ்,
பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி,
பண்டாரவளை.



ஆர். தர்ஷிக்கா,
கோணாகலை தமிழ் மகா வித்தியாலயம், பசறை.





எம். சுமித்ராதேவி,
பசி.யோவான் தமிழ்க் கல்லூரி,
இறக்குவானை.





முஸம்மில் ரயா,
ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை.



எம். ஹமீட்,
அம்பகஸ்தென்ன முஸ்லிம் மகா வித்தியாலயம்,
வெலம்பொட.



பி. துலக்ஷன்,
சென் ஜோசப்ஸ் கல்லூரி,
மஸ்கெலியா.




எஃப். அஸ்பா,
மதீனா தேசிய பாடசாலை, சியம்பலாகஸ்கொடுவ.

# ஆளுடன்கூடிய முதலாவது தானியங்கி விமானம்



பல்வேறுபட்ட விமானங்களைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் ஆளுடன்கூடிய முதலாவது தானியங்கி விமானத்தை அறிந்திருக்கிறீர்களா? Ehang எனும் சீன நிறுவனமே இதனைத் தயாரித்துள்ளது. Ehang 184 என பெயரிடப்பட்ட இந்த தானியங்கி



விமானம் அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டதாகும். இதில் ஒருவர் மட்டுமே பயணிக்கமுடியும். இதில் பயணிப்பவர் தான் பயணிக்கும் இடத்தை இந்த விமானத்தில் உள்ள கணினி வரைபடத்தில் சுட்டிக்காட்டி பறக்கும்படி கட்டளை இடுவதன் மூலம் குறிப்பிட்ட இடத்தை மிகத் துல்லியமாக இந்த விமானம் சென்றடைகின்றது.

இந்த விமானம் மின்சக்தியால் இயங்குகின்றது. இந்த விமானத்தால் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் 11,500 அடி உயரத்தில் பறக்க முடியும். தாழ்வாக 500 மீற்றர் உயரம் வரை பறக்க முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org